செ.வெ.எண்.33 நாள்.13..04.2017.

திருநெல்வேலி மாவட்டத்தில் செய்தியாளர்களுக்கான இலவச மருத்துவப் பரிசோதனை முகாமினை மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் மு.கருணாகரன்,இ.ஆ.ப., அவர்கள் தொடங்கி வைத்தார்கள்.

--------

திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டையில் உள்ள அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் செய்தி மக்கள் தொடர்புத் துறை மற்றும் மருத்துவத் துறை இணைந்து நடத்திய செய்தியாளர்களுக்கான இலவச மருத்துவப் பரிசோதனை முகாம் இன்று (13.04.2017) நடைபெற்றது. இம்முகாமினை, மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் மு.கருணாகரன்,இ.ஆ.ப., அவர்கள் தொடங்கி வைத்து, பார்வையிட்டார்கள்.

பின்னர், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது–

திருநெல்வேலி மாவட்டத்தில் பத்திரிக்கைகள் மற்றும் தொலைக்காட்சிகளில் பணியாற்றும் செய்தியாளர்கள், புகைப்படக்காரர்கள், மற்றும் ஒளிப்பதிவாளர்கள் ஆகியோருக்கு முழு உடல் பரிசோதனை முகாம், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் அவர்களின் நடவடிக்கைகளின்படி மருத்துவத் துறையுடன் இணைந்து நடத்தப்பட்டுள்ளது. இதன் மூலம் செய்தியாளர்களின் உடல் தகுதிகள் மேம்படுவதுடன், உடல் பராமரிப்பு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டுள்ளது. இப்பரிசோதனையில், உயரத்திற்கான சரியான எடை உள்ளதா என்பது குறித்தும், இரத்தப் பரிசோதனையில் கொழுப்பு, இரத்தத்தில் சர்க்கரை அளவு, தாது உப்புக்கள் அளவு உள்ளிட்ட பரிசோதனைகளும், இரத்த அழுத்தம், ஈசிஜி, பல் மற்றும் கண் உள்ளிட்ட பரிசோதனைகளும், தேவைப்பட்டோருக்கு எக்கோ டெஸ்ட் பரிசோதனைகளும் மற்றும் தேவைப்படும் பரிசோதனைகளும் செய்யப்பட்டது. இதன் மூலம் திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள பத்திரிக்கையாளர்களின் உடல் பேணப்படும் என மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் மு.கருணாகரன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்கள்.

செய்தியாளர்களுக்கான உடல் பரிசோதனை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை மருத்துவர்கள், அரசு ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவர்கள் மற்றும் செவிலியர்கள் ஆகியோர் மூலம் பரிசோதனை நடத்தப்பட்டது. சார்லி பல் மருத்துவமனையின் மூலம் பல் சம்மந்தப்பட்ட பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டது.

இந்நிகழ்ச்சியில், அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை முதல்வர் மரு.சித்தி அத்தி முனவரா, பொது சுகாதார இணை இயக்குநர் மரு.இளங்கோ, திருநெல்வேலி சுகாதாரப் பணிகள் துணை இயக்குநர் மரு.ராம்கணேஷ், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் (பொ) திரு.வெ.சீனிவாசன், உதவி மக்கள் தொடர்பு அலுவலர் (விளம்பரம்) திரு.எம்.எஸ்.மகாகிருஷ்ணன், மாநகராட்சி நகர்நல அலுவலர் திரு.பொற்செல்வன், சார்லி பல் மருத்துவமனை மருத்துவர் மரு.சார்லி உள்பட மருத்துவர்கள், செவிலியர்கள், நாளிதழ்கள் மற்றும் தொலைக்காட்சியின் செய்தியாளர்கள், புகைப்படக்காரர்கள், ஒளிப்பதிவாளர்கள் கலந்து கொண்டனர்.

வெளியிடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.